சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அசல் வழக்கு எண்.171/2022

2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25ம் நாள் வா,சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சபரீசன், பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராணி | வயது | 61 |
| க/பெ | ரங்கராஜ் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| லாசம் | மகாதேவபுரம், மேட்டுப்பாளையம் | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | விவசாயம் |

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் என்ன படித்து உள்ளேன் என்றால் 6-ம் வகுப்பு படித்து உள்ளேன். நான் தாக்கல் செய்து உள்ள நிரூபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். தாவா சொத்து எந்த புல எண்ணில் எங்கு அமைந்துள்ளது என்றால் புல எண் தெரியாது. மாஸ்திபாளையத்தில் உள்ளது. தாவா சொத்து எனது தாத்தா கரியப்ப கவுடருக்கு பாத்தியப் பட்டது என்றால் சரி தான். கரியப்ப கவுடருக்கு சுப்பம்மாள், சுப்பையா கவுடர் மற்றும் கரியம்மாள் ஆகிய 3 வாரிசுகள் என்றால் சரி தான். நான் சுப்பம்மாளின் வாரிசு என்றால் சரி தான். எனது பெற்றோருக்கு நானும் என் அண்ணன் ரங்கசாமி ஆகியோர் தான் வாரிசுகள் என்றால் சரி தான். எனது தாத்தா கரியப்ப கவுடர் தாவா சொத்தை பொறுத்து எந்தவிதமான ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்து விட்டார் என்றால் சரி தான். எனது அம்மா சுப்பம்மாளும் தாவா சொத்தை பொறுத்து எந்த ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்து விட்டார் என்றால் சரி தான். சுப்பையா கவுடர் எனது தாய் மாமா என்றால் சரி தான். 2ம் பிரதிவாதி சுந்தரம் எனக்கு என்ன உறவு முறை என்றால் அண்ணன் உறவு முறை. தாவா சொத்தை நாங்கள்அனைவரும் ஒன்றாக தான் அனுபவித்து வந்தோம் என்றால் சரி தான். கவுடர் மற்றும் கவுண்டர் ஆகிய இரண்டும் வேறு வேறு ஜாதி என்றால் சரி தான். வா.சா.ஆ.1 ஆனது 03.02.2022 அன்று எழுதப்பட்டு உள்ளது என்றால் சரி தான். எனக்கு ஒரு சொத்தை பதிவு செய்வது பற்றிய விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வா.சா,ஆ 1ன் 37-வது

பக்கத்தில் கட்டிட களப்பணி ஆய்வு செய்யப்பட்ட தேதி ஆக 02.02.2022 என்று காட்டப் பட்டுள்ளது என்றால் சரி தான். வா.சா.ஆ.1 ன் 20-வது பக்கத்தில் உள்ள பட்டாவில் கனகராஜ், சுப்பம்மாள்,மற்றும் முருகேசன் ஆகியோர்களின் பெயர்கள் உள்ளன என்றால் எங்கள் வீட்டில் முருகேசன் என்று யாரும் இல்லை. வா.சா.ஆ 1 ன் 19-வது பக்கத்தில் பட்டா எண்.2459 ல் கரியப்ப கவுண்டர் மகன் சுப்பைய கவுண்டர் என்று குறிப்பிடப்பட்டு உள்ளது என்றால் சரி தான். ஆனால் கூப்பிடுவது சுப்பைய கவுடர் என்று தான் கூப்பிடுவார்கள். பொன்னுசாமி மகன் ரவிச்சந்திரன் என்றும் குறிப்பிடப்பட்டு உள்ளது என்றால் அந்த பெயரில் எங்கள் வீட்டில் யாரும் இல்லை. அந்த பட்டாவில் உள்ள நிலத்தை தான் நாங்கள் பாகப் பிரிவினை செய்து உள்ளோம் என்றால் சரி தான். அந்த பட்டாவில் உள்ள மற்ற நபர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வில்லை என்றால் சரி தான். வா.சா.ஆ. 1ன் படி சுப்பைய கவுடருக்கு எவ்வளவு நிலம் பாத்தியப்பட்டது என்றால் 28 ஏக்கர் ஆகும். எனக்கு எத்தனை ஏக்கர் ஒதுக்கப் பட்டது என்றால் எனக்கும் எனது இரண்டு சகோதரர்களுக்கும் சேர்த்து 6 – ½ ஏக்கர் ஒதுக்கப் பட்டது. தாவா சொத்து எனது தாத்தா சுப்பைய கவுடருக்கு எப்படி பாத்தியப் பட்டது என்று தெரியுமா என்றால் பொதுவில் வைத்து சம்பாதித்தது. கரியப்ப கவுடருக்கு மொத்தம் எவ்வளவு நிலம் பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. எனது தாத்தா கரியப்ப கவுடருக்கு பாத்தியப்பட்ட பூமி மொத்தம் 28 ஏக்கர் 60 செண்ட் என்றால் சரி தான். ஆனால் வா.சா.ஆ.1-ன்படி 33 -1/2 ஏக்கர் பாகம் பிரித்து உள்ளோம் என்றால் எனக்கு தெரியாது. எனது தாய் மாமா சுப்பைய கவுடர் மிகவும் ஆள் பலம் மற்றும் அதிகார பலம் உடையவர் என்பதால் அவரது தூண்டுதலின் பேரில் இந்த வழக்கை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரி யல்ல. நான் என் அண்ணனிடம் தாவா சொத்தை பாகம் பிரித்து தர கேட்டேன் என்றால் சரி தான். எந்த தேதியில் கேட்டேன் என்றால் நினைவு இல்லை. பாகம் பிரித்து தரக் கோரி வழக்கறிஞர் அறிவிப்பு ஏதும் அனுப்ப வில்லை என்றால் அனுப்பி உள்ளேன். அந்த அறிவிப்பை இந்த வழக்கில் தாக்கல் செய்து உள்ளேனா என்றால் தாக்கல் செய்து உள்ளேன். அது போல எந்த அறிவிப்பும் அனுப்பவில்லை என்றும் அதனையும் இந்த வழக்கில் தாக்கல் செய்ய வில்லை என்றால் சரி யல்ல. இந்த வழக்கிற்கு வழக்கு மூலம் எதுவும் இல்லை

என்றால் சரி யல்ல. 1ம் பிரதிவாதி, சுப்பைய கவுடர் மற்றும் அவரது வாரிசுகளும் அதிகமான பங்கினை பாகப் பிரிவினை ஆவணம் மூலமாக பெற்றுக் கொண்டதால் அந்த பாகப் பிரிவினை ஆவணம் செல்லத்தக்கது அல்லது என கோயமுத்தூர் 5-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.1175/2022 என்ற வழக்கினை தாக்கல் செய்து உள்ளார் என்றால் சரி தான். அந்த வழக்கில் நானும் ஆஜர் ஆகி உள்ளேன் என்றால் சரி தான். அந்த வழக்கில் நான் இன்று வரை எதிர் வழக்குரை தாக்கல் செய்ய வில்லை என்றால் சரி தான். 1ம் பிரதிவாதி எல்லோருக்கும் சரிசமமான பங்கு கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் அ.வ.எண்.1175/2022 என்ற வழக்கினை தாக்கல் செய்து உள்ளார் என்றும் ஆனால் அந்த வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்பதற்கு ஆகவே எனது தாய் மாமா சுப்பைய கவுடர் சொல்லி கொடுத்து இந்த வழக்கை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரி யல்ல. நான் சுத்தமான கரங்களுடன் இந்த வழக்கை தாக்கல் செய்து உள்ளதால் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரி யல்ல. அ.வ.எண்.1175/2022 வழக்கின் தீர்ப்பு இந்த வழக்கை கட்டுப்படுத்தும் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு தள்ளுபடி செய்யத் தக்கது என்றால் சரி யல்ல.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

Sd/-G.Gengaraj,
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.